தனிப்பிரதி 1 அணா ஆண்டு சந்தா ரூ. 5. REGD. NO. M. 4455

திராவிடநாடு

ஞாயிறு வெளியீடு.

ஆசிரியர்.
C. N. அண்ணாதுரை M. A.,

"தமிழ் என்று தோள்தட்டி ஆடு!—நல்ல
தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு!"
[கவி பாரதி தாசன்]

மலர் 1. || காஞ்சிபுரம் 14—6—42 சித்திரபானு—வைகாசி 32—ஞாயிறு || இதழ் 15

எந்த "ஜீ"யும் நமக்கு வேண்டாம்

பரதன்.

"ஆகா! இதென்ன சோதி! கண்கூசுகிறதே! தலை சுழலுகிறதே! வானவீதி பூராவும் ஒளிமயமாகி விட்டதே, என்றால் இதனைக்கண்டு தாங்கவும் முடியவில்லையே! ஆ! ஆகா!"

டமாஸ்கஸ் நகருக்கருகே சென்று கொண்டிருந்த யூதர் சால் திடீரெனத் தோன்றிய வோர் சோதியைக் கண்டு, இங்ஙனம் கூவினர், கூவிக்கொண்டே உடல் பதறநின்றார், பதறியவரின் கண்கள் சுழன்றன மயக்க முற்றார், மண்ணில்புரண்டார். "உண்மை! உணர்ந்தேன்! உய்ந்தேன்!" என்றுரைப்பவர் போல், முகமலர்ச்சி கொண்டார். செவியிலே, வானொலி கேட்டது. ஏசுவின் விசுவாசிகளை, அவிவேகிகள்" என்று தூற்றி, அவர்களை அழித்தொழிக்கக் கங்கணங்கட்டிக் கொண்டிருந்த சால், டமாஸ்கஸ் நகரருகே, திடீரென ஓர் சோதியைக் கண்டாரென்றும், ஏசுவின் மகிமையைக் கடவுள் அவருக்கு எடுத்துரைத்தார் என்றும், யூதர் அக்கணமே ஏசுவின் இணையடி தொழுவேன் என்று இயம்பினாரெனவும், உடனே டமாஸ்கஸ் நகர் சென்று ஏசுவின் மார்க்கத்தைத் தழுவி, சால் என்ற பெயரை மாற்றிக்கொண்டு, பால், என்ற புதுப்பெயர் சூட்டப்பெற்று, பாரினோருக்கு கிருஸ்தவ மார்க்கத்தைப் போதிக்கும் பணியை மேற்கொண்டாரென்றும், கிருஸ்தவ வேதம்கூறும். மேனாட்டுப் பகுத்தறிவாளர்கள், சோதிதோன்றியது, பரவசமானது, ஆண்டவன் மொழிகேட்டது ஆகியவைகளை, வேறுவிதமாக விளக்கியுள்ளனர். புலமை படைத்த சால் என்பவர், யூதக்கொள்கையின் பயனாக ஏசுவை இகழ்ந்துரைத்து வாழ்ந்தார். டமாஸ்கஸ் போகையிலே ஓர் நாள், ஏதோ ஓர்விதவலிகண்டது. அதன்பயனாக அவரது சிந்தனைக் கருவியே, மாறிவிட்டது. யார்மீது சால் துவேஷங்கொண்டாரோ, அதே ஏசுவின்மீது அவருக்கு அன்பு உண்டாயிற்று. உடல் குலுங்கிற்று, உள்ளமும் குலுங்கிற்று, உள்ளத்திலே ஊறிக்கிடந்த கொள்கைகளும் குலுங்கின. யூதர் கிருஸ்தவரானார். சோதி கண்டார் என்றுரைப்பதிலே அற்புதமில்லை. விண்ணிலே பலவிசித்திரங்கள் இயற்கை காரணமாகவே உண்டாகின்றன. அத்தகையது, ஒளிதோன்றியது. அதை மதத்தோடு பிணைத்தனர், என்றுரைப்பர். சால், பால், ஆனது, கிருஸ்தவ மார்க்கம் கதிர்விட்டுப் பரவ உதவியாயிற்று. மனமாற்றம், மார்க்கத்துறையில் இதுபோல் பலப்பல ஏற்பட்டதுண்டு. சில மனமாற்றங்கள், மாறினோருக்கு மகத்தான இலாபத்தைத் தந்ததுண்டு, சிலருக்குக் கஷ்டநஷ்டம் ஏற்பட்டதுண்டு. சால் என்ற யூதர் பால் ஆக மாறாதிருந்திருப்பின், கிருஸ்தவ மார்க்கத்துக்கும், உலகுக்கும் எவ்வளவோ நஷ்டமன்றோ! இத்தகைய மாற்றங்கள் உலகத்தின் போக்கையே மாற்றிவிட்டது. சால், பாலாக மாறினது, சமணநிபுணர் சைவ நாயன்மாரானது, காளமேகம் வைணவத்திற்குச் சென்றது, திரைகடலோடித் திரவியம் தேடிய வியாபாரக் கோமான் பட்டினத்தடிகளாகி இனிக்கும் பேய்க் கரும்புக்குத் தேடிஅலைந்தது, மந்திரிவேலையைத்துறந்து எங்கும்பிரகாசமாய் இருப்பவர் எவர்? என்று கேட்டுக்கொண்டு தாயுமானர் வெளிப்போந்தது, துடுக்குக் குணமுள்ளவர் விவேகாநந்தரானது, ஆகியஇத்தகையமாறுதல்கள் மகத்தான சம்பவங்களன்றோ! அரசிளங் குமரரான சித்தார்த்தர், புத்தராகமாறினது, உலகினுக்கு எவ்வளவோ நன்மை பயத்ததன்றோ" என்று தோழரொருவர் மாலைப் போதினிலே என்னிடம் மொழிந்தார். அவரது எண்ணம், பால், புத்தர், நாவுக்கரசர், தாயுமானர் ஆகியவர்மீது பாய்ந்ததற்குக் காரணம், நான் ஆச்சாரியார், மாற்றத்தைக் குறித்து அவரிடம்பேசியதே யாகும். ஆச்சாரியாரின் மனமாற்றம், மகத்தான ஒரு சம்பவம், வரவேற்க வேண்டியவிஷயம், ஆதரிக்க வேண்டியதே, என்று தோழர் வாதிட்டார். எனக்கென்ன கரும்புதின்னக் கூலியாவேண்டும்! ஆச்சாரியார், மனம்மாறி, திராவிட நாட்டுப் பிரிவினைக்கு இசைந்தால், பழமும் நழுவிப் பாலில் விழுந்தது, என்று பரமானந்த மடைவேன். ஆனால், ஆச்சாரியார் மாறி இருக்கிறார் என்பது உண்மையேயொழிய, அது மனமாற்றமா, வேடமாற்றமா, என்பதிலேதான் சூட்சமம் இருக்கிறது. எனது தோழர் எடுத்துக்காட்டிய மேற்கோள்கள், உண்மையான மன மாற்றங்களைக் காட்டுவனவாகும்! அதே ரகமானதுதானா, ஆச்சாரியாருடையது? புத்தர், சித்தார்த்தராகிவிட வில்லை, பட்டினத்தடிகள் பட்டத்தரசராகி விடவில்லை.

8ம் பக்கம் பார்க்க.

தேவை.

மாதம் ரூ 25/-சம்பளத்தில் அனுபவமும் செல்வாக்கும் உடைய ஏஜண்டுகள் உடனே தேவை. மற்ற விபரங்களுக்கு 0-1-6 ஸ்டாம்பு அனுப்பித் தெரிந்து கொள்ளவும்.

காஞ்சி நிதி லிமிடெட்,

காஞ்சிபுரம்.

திராவிடநாடு

ஞாயிறு] 14—6—42 [காஞ்சி.

கடல் கடக்கும் கண்கள்!

"இடதுகாலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே!" என்று பாடி ஆடிடும் அணங்குகளுக்குக் குறைவா! அன்று அம்பலத்தில் அரன் ஆடினாராம் இடது காலைத்தூக்கிநின்று. இருந்தாலும் இந்தப்புதுக் குட்டியின் திறமை, அவருக்கு வருமா? பார், அவள் கண்கள் சுழல்வதை! கவனி, அந்தக்காலணி சதங்கையின் ஓசையை! இடை, பிடிதான், அதுவும்வளைகிறது பார்—என்று ஆடிடும் அணங்கின் அங்கவர்ணனைகளைக் கூறி ஆனந்திக்கும் ஆணழகர்களுக்குக் குறைவு உண்டா?

"மகா சன்னிதானம், உமதுகலையின் நேர்த்தியைக் கண்டு களித்தார்கள்" என்று நீறுபூசிய தூதுவன் கூற, நெடுநாளையக் கனவுபலிக்கும் வேளைபிறந்ததென்று கருதி, "பகவத் சங்கற்பம்! பெண் சிறிசு. அனுபவமில்லை" என்று தூதின்நோக்கத்தை உணர்ந்து தாய் கூறிவிட்டு, மகளைநோக்க, மகள் முகமலர்ந்து நிற்க, "இவ்வளவு இளமையிலே இத்தனை சௌந்தரவதியாயும், சுகசாரீரியாயும், சொர்ண பிம்பமே உருப்பெற்றெழுந்து வந்து சோபிதமாக, சுகானுபவத்தை ஆடிக்காட்டுவது போலவுமிருந்தது நடனம். மிக நேர்த்தி! என்று தூதுவன் கூறிவிட்டு, தோடுடைய செவியன் விடை ஏறிச்சென்றால், இந்தவைரக்கடுக்கன் அணிந்த காதார், மோட்டார் ஏறிக்கொண்டு, "முடிந்தது காரியம்" என்று கருதிக்கொண்டு செல்வதும், செல்கையில், சுந்தரருக்குச் சிவனாரே தூது சென்றாராமே, இதிலே தவறுஎன்ன? அன்பே சிவம்! தம்பிரான் தயவே யோகம்! என்று கூறிடும் காட்சிக்குக் குறைவா?

இவ்வளவும் எங்கே நடைபெறும் காட்சிகள்? சமஸ்தானாதிபதிகளின் அந்தப்புரங்களிலா? இல்லை! பசு, பதி, பாசம் எனும் பொருளுக்கு விளக்கமும், சத்துக்கும் சித்துக்கும் உள்ள பேதா பேத போகனையும், அண்டசராசரத்துக்கும் அகண்ட பரிபூரணானந்தத்திற்குமுள்ள அரிய தொடர்புக்கான விளக்கமும், "ஓம்" என்பதற்கு ஒன்பதாயிரம் பொருளும், ஓங்காரம், அகங்காரம், மமகாரம் என்பவைகளுக்கு எண்ணாயிரம் கருத்துரைகளும், தேவார திருவாசகப் பாராயணமும் நடைபெறும் பூலோக கைலாயமாம் சைவமடாலயங்களிலேயும், அதைச்சார்ந்த மிராசுகிராமங்களிலேயும், பக்திப் பண்ணைகளிலே நடைபெறும் காட்சிகளாகும்! இன்றும் நடைபெறுகிறது, இளித்தவாயராய், ஏமாளிகளாய், மக்கள் உள்ளனர்.

திருக்கைலாய பரம்பரை "ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானம்" திருவாவடுதுறைத் தம்பிரான் திருவீதியில் உலவும் திருக்கோலத்திற்கு, திருவாவடுதுறை இராசரத்தினமென்ன, திருவெண்காடு சுப்பிரமணியமென்ன, வீருசாமி என்ன, திருவீழிமிழலையார்களென்ன, இத்தனை நாதஸ்வரங்கள், ஜமாக்களுடன்! பல்லக்கிலே அவர்! அவர்மீது ஆபரணச்சுமை! அந்தச் சுந்தரச் சுமைதாங்கியின் சோபிதத்தைக்கண்டு சொக்கிடும் கூட்டமோ ஏராளம்! வைரத்தின்டாலிலே, பதக்கத்தின் பளபளப்பிலே, பட்டாடையின் பதத்திலே, பாமரர் மயங்காதிருக்க முடியுமா! மகாசன்னிதானத்தின் கடைக்கண்பார்வை வீழ்ந்தாலும் போதுமே கனகாபிஷேகங்கிடைக்குமே என்று கருதும் பேர்வழிகளுக்குப் பஞ்சமா! இத்தகைய கோலாகலக்காட்சிகள் மதத்தின் பெயரால் நடத்தப்பட்டு வருகின்றன. ஜீயர்கள் மகந்துகள், தம்பிரான்கள், ஆச்சார்ய புருஷாள், ஆகியோர்கள், சீமான்கள் சிற்றரசர்களுககு மேலாக ஆதிக்கம் செலுத்தி, நஞ்சை புஞ்சை, நகை நட்டு, பேழைபணம், தோட்டம் மடம், பல்லக்கு பரிவாரம், பட்டாடை, கொட்டுமுழக்கு; ரதம் வாகனம், சொர்ணாபிஷேகமும், பெற்று வாழும் இந்த சுரண்டல்காரர்களைக் காணவோ. கண்டிக்கவோ, இந்த முறை போகவேண்டுமென்று கூறவோ, மனமோ, நேரமோ இல்லாதவர்கள், மற்றஏகாதிபத்தியஎதிர்ப்பு, பாசிச எதிர்ப்பு, வல்லரசு ஒழிப்பு, என்றெல்லாம் நடத்தும்போது, நமக்குச் சிரிப்பதா, சித்தஞ் சோர்வதா, என்று தெரியவில்லை.

சோவியத் அன்பர்கள், பாசிச எதிர்ப்பாளர்கள், நாசிச ஒழிப்பாளர்கள், என்று நாமம் சூட்டிக்கொண்டு, தோழர்கள் மாநாடுகள் நடத்துந்தோறும், "அந்தோ! கண்முன் காணப்படும் குப்பையைக் கொளுத்தாது, கடல் கடந்து செல்லத்தம் கருத்தை ஏவுகின்றனரே" என்று எண்ணி நாம் ஏங்குகிறோம்.

தம்பிரான்கள்மீது நமக்குக் கோபமா! இல்லை! மகந்துக்கள் மீது துவேஷமா! இல்லை! அந்த முறை முறியாமுன்னம், மக்களின் வளைந்த முதுகுமட்டுமல்ல, குனிந்தஉள்ளம் நிமிர மார்க்கமும் கிடையாது. இதனைச் செய்யாமுன்னம், வேறு "எதிர்ப்புகள்" ஏது பயனும் தரா.

அக்கிரமம், ஆபாசம் ஆகியவைகளின் இருப்பிடமாக, மதநிலையங்கள் உள்ளனவெனில், மதமயக்குற்றுக்கிடக்கும் மக்கள், மனத்தெளிவு பெறுவதேது.

சோவியத் அன்பர்களே! ஒன்று கூறுவோம் கேண்மின்! கடல் கடக்கும் கருத்தினோராக மட்டுமிராதீர், இங்கே உள்ள இழிவுகளைக்காண்மின், களைய முன்வருவீர், என்று கூறுகிறோம், அன்பு காரணமாக.

நமது மக்களிடம் புகுத்தப்பட்டுள்ள மதம், ஆபாசக்கதைகளுக்கு இருப்பிடம். மனிதாபிமானத்தை மாய்க்கும் படுகளம், குடி, கொடுமை, கொள்ளை ஆகியவற்றினுக்கு பயிற்சிக்கூடம், இத்தகைய குப்பையை மக்களிடை விட்டுவைத்து, குன்றேறி நாம், "மனித சுதந்தரம் சமத்துவம்" என்றெல்லாம் பேசினால் பயன் ஏற்படுமா? நாறுதலைச் சாமியும், முக்கண்சாமியும், ஆயிரங்கண்ணனும், ஆனைமுகச்சாமியும், ஆளிவாய்ச்சாமியும், பருந்தேறுபவரும் பாவைபரைத்தூக்கித்தலைமீது வைத்திருப்பவரும், ரிஷிபத்தினிகளிடம், ரசானுபவத்தை நாடி, நடுநிசியில் செல்பவரும், இத்யாதிதிருவுருவமும் திருக்கல்யாண குணங்களும் கொண்டு கடவுள்களை, மக்கள் "தொழ" வைத்துவிட்டு, "வீறுகொண்டெழுக! தோள்தட்டி முன்வருக! முதலாளித்துவத்தை முறியடிமின்! என்று கோஷமிட்டுக்காணப்போகும் பயன் என்ன?

(7ம் பக்கம் பார்க்க.)

ரோமாபுரி ராணிகளின் லீலா விநோதம்!

வீனஸ்

"துள்ளுமதவேள் கைக் கணையாலே
தொல்லை நெடுநீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே"

ரோம் ராஜ்பத்து ஆடவரும் பெண்டிரும் அடிக்கடி இக்கருத்துள்ள கீதத்தையே கேட்பர், இன்புறுவர்! காமக்கணைகள், நீலக்கடல், நிலவு, சோலைக் குயில், இவைகள் ரோம்ராஜ்ய ரசானுபவர்களைத் தாக்கித் தகர்த்தன. இந்தத் தாக்குதலைக் கண்டவர், தழுவியும் தழதழத்த குரலிற்பேசியும், தாபத்தைத் தணித்துக் கொள்ள தடாகத்தின் மருங்கு தேடிச்சென்றோ, தணலை வீசும் சூரியன் சாய்ந்ததும், சாலையோரத்தில் சந்தித்தோ, தமது துயர்களைய முனைவர். எதிரியின்பிடரியைப் போர்க்களத்திலே பிடித்திழுத்த வீரர்களின் கரங்கள் அழகியமங்கையின் மலரடிதடவும்! எதிர்த்துவரும் கரியின் துதிக்கையைப்பற்றிஇழுத்த கரங்கள்,குறிப்பறிய வேண்டி கோதையரின் கூந்தலைக் கோதும்! போர்க்களத்திலே வாள் வேல் கொண்டு மாற்றானின் மார்பிலும் முதுகிலும் வடுக்களை உண்டாக்கிய மாவீரர்கள், போகக்களத்திலே புன்சிரிப்புக்காரிகளின் உடலெங்கும் நகக் குறிகள் பொறித்து நகைப்பர்! உல்லாசிகளின் உதடு, செங்கரும்பு அவர்களுக்கு! மயிலே! மாடப்புறாவே! மலர்ச் சோலைக்குயிலே! மதுரமொழிக் கிளியே! என்று கூறுவர். உள்ளமும் உடலமும் உரசஉரச உச்சிமுதல் உள்ளங்கால்வரைப்புளகாங்கிதமுற்று, பரிமளப் பஞ்சணையில், குமுகுமுகுமுவெனக் குரலொலிக்க, தகதகவென பணிஜொலிக்க, கிலுகிலுவென வளை ஒலிக்க, விடுவிடு என்றுரைத்து அவள் சிரிக்க, இருஇருவென்று இவன் இயம்ப, கோலாகலக் காட்சியாக இருந்தது ரோம்நாட்டு அரண்மனையிலும், மாளிகைகளிலும். இத்தகையகாமக்கூத்தர்கள் வாழ்ந்த நாட்களிலே, அதிகாரத்துக்காகச் சதிகள் நடப்பதும், குட்டிக் கலகங்கள் எழுவதும், குடும்பமணிகள் கொள்ளை போவதும், சகஜமாக இருந்தது. அதிகாரங் கிடைத்ததும் அதனைச்சுகபோகச் சீட்டெனக்கொண்டு ஆடினவரிற் சிலர் பிறகு அவதியுற்றதுண்டு. அதிகாரம் நஞ்சானதுமுண்டு. மலர்கண்டு வண்டு மொய்க்க, அதுகண்டு "தோழி வண்டினை விரட்டு" என்று சீமாட்டி கூற, கூந்தலின் கருநிறத்தோடு வண்டின் நிறமும் கலந்துபோனதால், வண்டினைக் காணாது தோழிவாட சிரிக்கும், சிங்காரி, மயிலென நடக்க, "இடைபடும் பாடு எவ்வளவு காணாய் நண்பா!" என்று நண்பரிருவரிற் ஒருவர் மற்றவர்க்குக்கூற, "துடியிடை, அந்தத் துணைக்கனியின் கனத்தைத் தாங்கமாட்டாது துவளுகிறது" என்று அவன்பதில்கூற, தனது எழில்கண்டு பேசும்இளங்கோமான்கள் யாவர்என்றுகூரிய கண்களை அவள் ஏவ, அந்தப்பார்வை, ஈட்டிமுனைபாய இடந்தராத மார்பையும் துளைத்திட, "பிழைப்பது எங்ஙனம் இந்தப் போரிலே" என்று வீரர்கள் வியர்க்க, "வீழ்ந்தனர் இருவர்" என்றெண்ணி சீமாட்டி சிரிக்க சித்தம் அனலிடைமெழுகென உருகி நின்று, சிவந்த வாயினைஎண்ணியும், சிந்தும்தேனினை எண்ணியும் இளங்கோமான்கள் ஏங்குவர், இரவினில்தூங்கார், எத்தொழிலில் புகினும் பார்த்தவிடமெங்கும் அந்தப்பாவையின் முகமே தோற்றுதே என்று அயர்வர்! ஒருபார்வை, ஒரு புன்சிரிப்பு, இடை, நடை இவை இவ்வளவு வெற்றிகளை நொடியிலே பெற்றுவிடுகின்றன. மனதிலே வெப்பம்எழ, அதற்கு மனதை மயக்கிய மாதரின் மொழியெனும் இளநீர் பருகிட, இளங்கோ எண்ணுவான். தோட்டத்து வாசல் திறந்திருக்குமோ, காவலும் கட்டும் மிகுதியோ, மதிலும் வேலியும்இடப்பட்ட இடமோ, என்று எண்ணி ஏங்குவான். அவளருகே சென்றமர்ந்தாலன்றி விடாய் தீராது. இங்கிலையில் வீரன், வளையவும், வணங்கவும் கூடத் தயாராகிவிடுகிறான்! ரோம்நாட்டு "மனஉருக்கிகள்" இத்தகைய சந்தர்ப்பம் ஏற்பட்டால், தம்மைப் பொன்காய்க்கும், பூங்கொடியாக்கிக் கொள்ளவும், தம்புதல்வர் பூமான்களாகவும் வேந்தர்களாகவும் விளங்கவும் வழி செய்து கொள்வர்.கொலுமண்டபத்திலே பலநூல்வல்லோர்கூறுவதோ, மதியூகமந்திரிகள் சொல்வதோ ஏற்றுக் கொள்ள விரும்பாதமன்னனும், கெண்டை விழி மாதரின் கேளிக்கைக்கூடத்திலே இதமொடு அவள் இதை இங்ஙனம்செய் என்றுரைத்தால், இன்றே செய்வேன் இன்னுயிரே! என்றுரைப்பர். அவ்வளவு கவர்ச்சிக்காரிகள் உலவினர் ரோம்சாம்ராஜ்யத்தில். ஆனால் சிற்சில குணவதிகள், அதிகாரமும் அதுதரும் ஆனந்த வாழ்வும் ஆபத்தான ஓர் வலை, அதிலே வீழ்ந்தோர் வேதனையே அடைவர். சருக்குநிலம், எரிமலை, படுகுழி இவைகளுக்குச் சமம், அதிகாரம். நண்பரையே விரோதிகளாக்கும், நாட்டிலும் வீட்டிலும், வாட்டத்தையும் வளர்க்கும் என்று எண்ணியவர்கள் சிலர் உண்டு.

"நீ வீசும்வேல், எதிரியின் இருதயத்தைப் பிளக்கிறது, இரத்தம்பீறிட்டு வெளியேவருகிறது, அந்தக் காட்சியைக்கண்டு கலங்குவாயோ!

கலங்கேன் அதைக்கண்டு! களிப்பன்றோவரும். வேலின் கூர்மையும் என் கைத்திறனும் கலந்துதரும் காட்சிகண்டு, மகிழ்வேன்.

நீ வீசும் உடைவாள் எதிரியின் நெஞ்சிலேகுத்தி அவனை நிலத்திலே சாய்க்கிறது, அவன் மார்பு கத்திமுனையில் சிக்கிக்கொள்ள, வாளின் அடிப்பாகம் தரையிலே நிற்க, அவன் மண்டியிட்டுக் கீழே நின்றால், உன்மனம் உடையாதா?

என் உடையும்? அவனைக்காணும்போதே, அவன் என் உயிர் குடிக்க வருபவன், எனவே அவன் உயிரை நாம் குடித்து உடலைக் கழுகுக்கிடவேண்டுமென்றறன்றோ போர் துவங்குகிறது. அந்நிலையில் அவன் வதைவதுகண்டு என்மனம் ஏன் உடையும்?

சபாஷ்! வீரா! உன்திறமையை நான்மெச்சினேன்."

ரோம் நாட்டு ராணுவ போதகாசிரியருக்கும் அவருடைய மாணவருக்கும் இதுபோல் உரையாடல் நடக்கும். கலங்காத உள்ளமுடையோன் என்று புகழப்படும் அத்தகைய போர்வீரன், தன் ஆசைநாயகி, "கண்களிருகலமென முத்துமுத்தாய்" கண்ணீரை உகுக்கும்போது, கலங்குவான், அவள் கன்னத்தில் கைவைத்துத் திகைத்துநிற்கக் கண்டால், தீயிடை வீழ்ந்த புழுப்போல் துடித்து, "சுந்தரி! துயருற்ற காரணம் என்ன?" என்றுகேட்பான், கைகளைப்பிசைந்துகொள்வான். கண்களை கசக்கிக் கொள்வான். அவள் முகமலர்ந்து தன்மீது சாய்ந்து கொள்ளும் வரை வீரன் விம்முவான்! மாதரிடம்கொள்ளும் மையலின் முன்பு மனோவலிமை துரும்பாகி விடுகிறது. இத்தகைய போகத்திலே புரண்டுவாழ்ந்த விட்டிலியஸ் என்பான், திடீலென்று தர்பாரில் இடம்

(6ம் பக்கம் பார்க்க)

ரோமாபுரி ராணிகள். 6ம் பக்கத் தொடர்ச்சி.

பாடி, சுந்தரமாக ஆடி, பருகிடப்பானம் தந்து வேந்தனை மயக்கினர். அவன்விழி, போகவழியே சென்றது. புயல் அடிக்க ஆரம்பித்தது அவனுக்குத் தெரியவில்லை.

விட்டிலியஸ் ஓர் வீணன், அரச அவையே கெட்டது அவனால், போரிட்டுப் புகழ்தேடினானில்லை, ரோம்சாம்ராஜ்யத்தின் செல்வத்தைச் சிதைக்கும் செல்லானேயன்றி, அதன் சிறப்பைத்தீட்டும் ஓவியக்காரனானில்லை. இவன் ஓர் பாரம்! என்று மக்கள் முணுமுணுத்தனர்.

வெஸ்பேசியன் என்ற தளபதி இதுவே சமயமெனத் தெரிந்து, புரட்சிக்கொடியைப் பறக்கவிட்டான். ரோம்நகரை நோக்கி நடந்தான் படைகளுடன்.

விருந்துண்ணவும், கோமளவல்லிகளுடன் கொஞ்சவுமே விட்டிலியசுக்குத்தெரியும், வீரத்துக்கும் அவனுக்கும் சம்பந்தமேது! வெஸ்பேசியன் கிளம்பினது கேட்டு, வியர்த்தான், விடவிடத்தான், ஐயகோ என்றலறினான். பயந்தான், பதைத்தான். கருப்புடை அணிந்தான், கவலையின் உருவானான். கண்ணீர்பெருக்குடன் "வந்ததே வேதனை, சொன்னேனே முன்னமேயே" என்று கதறிக்கொண்டு காலேரியா வந்து நின்றாள். அவளது குழந்தைகள், கோவெனக்கதறின. மனைவியும் மக்களும் உடன்வர, மன்னன், சோகித்து நடந்து, போர்வீரர்களையும் பொதுமக்களையும் கண்டு புலம்பி, "இதோ நான் முடி துறக்கிறேன். உயிர்த்தானம் செய்யுங்கள் உத்தமரே" என்று கெஞ்சினான். ஆணவம் அழிந்து, அதிகாரம் ஒழிந்து, அரண்மனை துறந்து உயிரைக்காப்பாற்றிக்கொள்ள பிச்சை கேட்கப் புறப்பட்டான் போகப்பிரியன். மக்களோ எள்ளிநகையாடினர்! இரக்கங்காட்ட மறுத்தனர்! என்னே இவன் கோழைத்தனம் என்று இடித்துரைத்தனர். இதற்குள் வெஸ்பேசியன் வெற்றிவிருதுகள் புடைசூழ நகரில் நுழைந்தான். விட்டிலியஸ் அரண்மனைக்கோடிச் சென்று, யாருமறியாதவாறு ஓர் மூலையில் பதுங்கிக் கொண்டான். கோலாகலத்துடன் அவன் உலவிய இடத்திலேயே, உடலும் உள்ளமும் குன்றி, விட்டிலியஸ் பதுங்க நேரிட்டது. காலம் பழிதீர்த்துக்கொள்ளும் விதங்காண்க. வெஸ்பேசியனின் ஆட்கள் விட்டிலியசைக் கண்டுபிடித்திழுத்து, காரியுமிழ்ந்து, காவலனே நீ! என்று கேலிசெய்து, கைகளைப் பின்புறமாகக்கட்டி, கங்கலை அணிவித்து, முகவாய்க்கட்டைக்கருகே கட்டாரியை நிறுத்தி, முகத்தை மேலுக்கு நிறுத்தச்செய்து, விட்டிலியசை வீதி வீதியாக விரட்டிச் சென்றனர். வாணவேடிக்கைகள் வாத்தியகோஷங்கள் வனிதையர் வீசிடும் மலர்கள், ஆகிய இன்பகரமான நிலையுடன் வெற்றி ஊர்வலம் வந்த விட்டிலியஸ், அதே ரோம்நகரில், கல்லடி மண்ணடி பெற்று, கண்டவர் ஏசிட, காலைத்தட்டிக் கீழே உருட்டியும், தலையைக் குட்டித்தகாதன கூறியும், சித்திரவதை செய்திட, மக்களின் இடிபட்டு, ஊர் சுற்றினான். அவன் உயிர் போகுமுன்னம், அவனைச் சித்திரவதை செய்து விட்டனர். காலேரியாவின் கண்ணீர் ஆறெனப் பெருகிற்று. சிங்காதனமென்பது ஓர் பாம்புப்புற்று! அதன் மீதமர்வோரை, ஏமாந்த நேரத்திலே, புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு, பொல்லாத பற்களால் கடித்துக் கொல்லும் என்று கூறிப்புலம்பினாள். அவளது மக்களும், மருண்டு அழுதனர்.

கதீபு சையது உசேன் சாகிபு எழுதியது.

எனக்கு எட்டு ஆண்டுகளாக நீரழிவுநோய் ஏற்பட்டு பகல் இரவு சிறுநீர் மிகுதியாய்க் கழிந்து நல்ல தூக்கமில்லாமல் நாவறட்சி உடல் இளைப்பு முதலியவைகளால் வருந்திக்கொண்டிருந்தேன். அதற்கு பல மருத்துவங்கள் செய்தும் பயனில்லை. இந்த நிலைமையில் எனது முதுகில் ஐந்து அங்குலம் குறுக்களவுள்ள பிளவைக்கட்டி ஏற்பட்டது. அதைப்பார்த்த மருத்துவர்கள் எல்லாரும் அறுத்துமருத்துவம்செய்ய வேண்டுமெனக் கூறினார்கள். நான் அறுத்துக்கொள்வதற்கு அஞ்சி சென்னை தமிழ் மருத்துவர் பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தரிடம் காட்டினேன், அவர் கொடுத்த மருந்தை உட்கொண்டு பிளவைக்குமேலே போடக்கொடுத்த மருந்தையும் போட்டுக்கொண்டு வந்தேன். அக்கட்டி பழுத்து வாய்திறந்து சீழ்வடிந்து காய்ந்து ஒழிந்தது. நீரில் உள்ள சர்க்கரையும் நீங்கியது. அறுபது வயதுக்கு மேலாகிய நான் இந்தநோயில் பிழைக்கமாட்டேன் என நானும் எனது குடும்பத்தினரும் முடிவுசெய்திருந்த பெருங்கவலை நமது தமிழ் மருத்துவத்தில் தேர்ச்சிபெற்ற பண்டிதர் S. S. ஆனந்தம் அவர்களால் நீங்கி மகிழ்ச்சி அடைந்தோம் என்பதை உலகம் அறிந்துக்கொள்ள விரும்புகின்றேன். (ஒம்)

கதீபு சையது உசேன் சாகிபு,
லுங்கி வியாபாரம்,
381, ஐரோடு திருவல்லிக்கேணி சென்னை.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்
தமிழ் மருத்துவக்கூடம்,
தலைமை நிலயம்
110 ராகவையாவீதி தியாகராயநகர் சென்னை.
தற்கால கிளை நிலயம்,
148. நடுத்தெரு, சேக்குப்பேட்டை, காஞ்சிபுரம்.

போர் முனைகளில்

ரஷியாவில், நாஜிகள். செபாஸ்டபூலைக் கடுமையாகத் தாக்கி வருகின்றனர். ரஷியப்படைகள் சளைக்காமல், நாஜிகளைப் பிணமாக்கி வருகின்றன.

* * * * * *

லிபியாவில் ஜெனரல் ரோமல், இரண்டாம்முறையாக முறியடிக்கப்பட்டார் ஏராளமான நஷ்டம், பிரிட்டிஷாரின் வெற்றிகண்டு அமெரிக்கா பூரிக்கிறது.

* * * * * *

பிரிட்டிஷ் விமானங்கள் ஜெர்மனியைத் தாக்கியபடி உள்ளன.

* * * * * *

பிரிட்டிஷ் தாக்குதலால் கொலோன் நகரில் 11,000 பேருக்குமேல், இறந்தனர்என்று நாஜிஅதிகாரியேகூறுகிறார்.

* * * * * *

ஜப்பானிய கடற்படையில் ஒருபகுதி, நாசமாகி விட்டதாக, நிபுணர்கள் கூறுகின்றனர்.

* * * * * *

இதுவரை ஜப்பானியர். சீனர்மீது 800 முறை விஷவாயு ப்ரயோகித்திருக்கின்றனராம்,

ஒரு வேண்டுகோள்.

தோழர்களே!

காகிதக்கட்டுப்பாடு முதலிய சில அசந்தர்ப்பங்களால், இந்த இதழ், 8-பக்கங்கள் கொண்டு வெளிவருகிறது. பொறுத்தருள்க. அடுத்தவாரம் வழக்கம்போல் 12-பக்கங்களுடன் வெளியிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மானேஜர்.

குமஸ்தாவின் பெண்தான்

அல்லது

கொலைகாரியின் குறிப்புகள்

—— சௌமியன் ——

முன்பு:— [கள்ளக்காதலனைக் கொன்று தூக்குத்தண்டனைபெற்ற காந்தா தன் டைரியில் தன் வரலாறுபற்றி எழுதிவைத் திருக்கிறாள். அதிலிருந்து அவளது ஆரம்பக்காதல், கூடா மணம், விதவைக்கோலம், சோரம் ஆகியவை நேரிட்டவிஷயம் தெரிகிறது. இப்பகுதியில், காந்தா தன் ஆரம்பக்காதலனை மீண்டும் அடைந்தவிஷயம் தீட்டப்பட்டிருக்கிறது.]

"அஷ்டதரித்திரனுக்கு அதிர்ஷ்டம் வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்பதுபோல், கேவலம், சோற்றுக்கே வழியில்லாது இருந்தவள், ஜாதி ஆசாரத்தைவிட்டு, குலத்தைக் கெடுத்துக் கொண்டு, எவனுடனே குலவிவாழ்கிறாள். அவளுக்கு கர்வம் இல்லாமலா போகும்! ஆனால் இந்த வாழ்வு எத்தனைநாளைக்கு இருக்கமுடியும். மிராசுதாரரின் சிநேகம் போனால், லாட்டரி அடிக்கவேண்டியதுதான். என்னகர்வம்! எவ்வளவு அலட்சியம்! என்னைக்கலியாணம் செய்துகொள்ளும்படி, கடிதம் போட்டாளய்யா அந்தக்குட்டி, இப்போது அவள் செய்கிற பிகுவும், பேசுகிறபேச்சும், எப்படி இருக்கிறது தெரியுமோ! அந்தக்கடிதம்கூட என்னிடம் இன்னமும் இருக்கிறது" என்று சோமு, கோபத்துடன், பங்களாதோட்டக்காரனிடம் கூறினாராம். அவனைச்சந்தித்து என்னைப்பற்றி விசாரித்துவிட்டு, பிறகு, தமக்கிருக்கும் துக்கத்தை ஆற்றிக்கொள்ள ஆத்திரத்தோடு என்னைத் திட்டி இருக்கிறார். தோட்டக்காரன், "ஐயா" விடம் சொல்லிவிட வேண்டும் என்றான். நான் வேண்டாம் என்று தடுத்துவிட்டேன். என்னைச் சோமு வைதது பற்றி எனக்குக் கோபம் வரவில்லை. அந்தத்திட்டு, சோமுவின் மனதிலே மூண்டுவிட்ட ஆசையிலே தோன்றியது அல்லவா! நான் உதாசீனமாக நடத்த நடத்த, அந்தத்தீ கொழுந்துவிட்டு எரியத்தானே எரியும். தீ எரியும்போது, வேதனை தாளமாட்டாது இப்படியெல்லாம் பேசிக்கொண்டுதான் இருக்கச்சொல்லும். என்னைச்சோமு, உதாசீனம் செய்தபோது என் துக்கத்தை, தலையணையிலே நீராகப் பெருக்கித்தீர்த்துக்கொண்டேன். நான் பெண்பால். அவர் ஆண்பிள்ளை ஆத்திரத்தைத்காட்டுகிறார். காட்டட்டுமே! அதுஎனது வெற்றியைத் தானே வெளிப்படுத்திற்று. சபாஷ்! காந்தா, என்றுஎன்னைநானே பாராட்டியுங்கொண்டேன்.

* * * * *

நேரில் பேசிப்பயனில்லை. டெலிபோனில் பேசிப் பயனில்லை. கெஞ்சியும் கொஞ்சியும், மிரட்டியும் திட்டியும் எதனாலும் பலன்கிடைக்காமற் போயிற்று, ஆனால் சோமுவுக்கு வெகு வேகமாக வளர்ந்து, கொழுந்து விட்டெரிந்த தீ அணையுமா? எப்படியேனும் என்னை இணங்கச் செய்யவேண்டுமென்று கருதி, மறுபடியும் ஒருநாள் வீடுவந்து பேசினான். அப்போது நான் "சிறந்த வேதாந்தியான நீர் கேவலம் காமாந்தகாரத்திலே மூழ்கலாமா? எவ்வளவு படித்தவர். என்போன்ற கெட்டவளின் சகவாசம் ஆகுமா; வேண்டாம் சோமு, விட்டு விடு. நான் என்ன! என்னைவிட உன்மனைவி அழகு என்று கூறுகிறார்கள்" என்று நான், சோமுவுக்கு, புத்திமதி கூறத்தொடங்கினேன்

"காந்தா! வேதாந்தமெல்லாம் போய் வெகு நாட்களாகிவிட்டன. கையில் இருந்த காசில் பெரும்பகுதி, அந்த இழவுக்கு அழுதுவிட்டேன். கடைசியில், ஒரு பணக்காரப்பெண்ணை கலியாணம் செய்துகொண்டேன். ஆனால் வாழ்க்கையிலே ருசி இல்லை. உன்னைக் காண்பதற்கு முன்பும், நான் எத்தனையோ முறை உன்னைப்பற்றி எண்ணி எண்ணி ஏங்கியதுண்டு."

"என்னைப்பற்றிய சேதியைக் கேள்விப்பட்ட பிறகுமா?"

"ஆமாம்! நான்தானே உன் நிலை கெட்டதற்குக் காரணம். நான் வீணான வேதாந்தமும், விரசமும் கொண்டு, ஏதோ உலகிலேயே நான்தான் புது நாயன்மார் என்று எண்ணிக்கொண்டு, கலியாணபந்தமே கூடாது என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அதனாலேயே, உன்னை நான் கலியாணம் செய்துகொள்ள மறுத்தேன். இந்த ஆறு வருடத்தில் நான் அனேக பாடங்கள் தெரிந்துகொண்டேன். உலகில் வாழ்க்கை இன்பம் இருக்கவேண்டுமானால், மனமொத்த காதலியைக் கூடி வாழவேண்டும். பாடுபட்டுப் பிழைக்கவேண்டும். பலருக்கு நன்மைதரும் காரியம் செய்ய முயலவேண்டும். வெட்டிக்கு வேதாந்தம் பேசிக்கொண்டு, பணத்தையும் காலத்தையும் பாழாக்கிக் கொண்டு இருக்கக்கூடாது. காந்தா! நான் மணம் செய்துகொண்டவளுக்கு என்னிடம் ஆசை இருக்கக் காரணமில்லை. எனக்கும் அவளிடம் ஆசை கிடையாது ஆனாலும் ஏதோ வாழ்ந்துவந்தேன். உன்னைக்கண்டது முதல், நீ அன்று மூட்டிவிட்ட காதல், பெரியஜுவாலையாகிவிட்டது. இனி உன்னோடு வாழ்ந்தால்தான் நான் வாழமுடியும் என்னை நீ ஏற்றுக்கொள்.

"அதுஎப்படி முடியும்?"

"ஏன் முடியாது? என்மீது உனக்கு ஆசைஇல்லையா? நிச்சயமாகச் சொல் காந்தா. ஆசை இல்லையென்றால், அடிக்கடி உன்னைக்கண்டு பேச அனுமதிப்பாயா? அன்று உன்னைக் கன்னத்தில் அடித்ததைக்கூடப் பொறுத்துக்கொண்டாயே! தோட்டக்காரன் எதிரில் திட்டினேன். பிறகும் என்னிடம் சகசமாகவே பேசுகிறாயே! இருப்பதை மறைக்காதே. என்மீது ஆசை உண்டு உனக்கு. முன்பு உன் ஆசையை நான் வீணாக்கினேன். இன்று நம்மிருவர் விருப்பமும் ஒன்று கலக்கட்டும்."

"அதுதானே முடியாது."

"ஏன் காந்தா முடியாது?"

"நான் வேறொருவரின்பொருள்! என்னைவறுமைப் பிணியிலிருந்து மீட்டு, உலகில் நிம்மதியாக வாழச்செய்யும்மிராசுதாரரின் வைப்பாட்டி. ஆமாம்! உமது மனைவியாக இருக்கத்தவங்கிடந்தேன். முடியவில்லை. வேறுஒருவன் பெண்டானேன். அவன் விட்டுச்சென்றான். காட்டுரோஜாவாகஇருந்தேன். கவலையில்மூழ்கினேன். துக்கத்தில்துடித்தேன். கஷ்டத்தின்மேல்கஷ்டம் வந்தது. காப்பாற்றவோ ஆதரவு தரவோ, ஐயோ பாபம் என்று சொல்லவோ, யாரும் முன்வரவில்லை. குடும்பத்தொல்லை கொட்டிற்று. விஷம் தலைக்கேறிற்று. சோமு! நான் விபசாரியாக வேண்டிய நிலையும் வந்தது. நான் குலமாதாக, குடும்ப விளக்காக, உன் தர்மபத்தினியாக இருக்க அவாவினேன். இன்று, உனது கண்களை மயக்கும் காமவல்லியாக இருக்கிறேன். உன்னுடைய பொருளாக இருக்க எண்ணினேன், இன்றோ, மிராசுதாரரின் போகப்பொருளாக இருக்கிறேன். பணம் படைத்த நீ, என்னை மணந்துகொள்ள மனமின்றி, கைவிட்டாய். வேறோர் பணக்காரப்பெண்ணை மணம் செய்துகொண்டாய். வாழ்க்கையிலே வசீகரம் இல்லை என்று இன்று வருத்தப்படுகிறாய். எற்பாரற்றுக்கிடந்த ஏழையாகிய நான், விதவையாகி, வேதனைப்பட்ட

போதுஎனக்கு வாழ்வு என்ற ஒன்றுஇருக்கமுடியுமா? என் இளமையையும், அழகையும், அன்பையும், ஆவியையும், உனக்கு அர்ப்பணம்செய்ய நான் முன்வந்தேன். உன் காலடியிலே வைத்தேன். நீ உதைத்துத் தள்ளினாய். இப்போது என்னை அடையவேண்டுமென்று அலைகிறாய். என் மனம் அந்நாட்களில் பட்டபாடு என்ன என்பது உனக்குத்தெரியுமா? ஒரு பெண் தன் கூச்சத்தையும் விட்டு, தன்னைக்கலியாணம் செய்து கொள்ளும்படி, கடிதம் எழுதவும் துணிந்தாள் என்றால் அவளுடைய விருப்பம் எவ்வளவு அதிகமாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்த்தாயா? பணக்காரக் குடும்பத்தவராக இருந்ததால், உமக்கு **உள்ளம்** என்ற ஒரு வஸ்து இருக்கும் என்பது கூடத் தெரியாது போயிற்று! பணம் குறையக்குறைய நீர், உமது வைராக்யத்தை விட்டுவிட்டு, ஒரு பெண்ணை மணந்துகொண்டீர். அன்று என்னை உதறித்தள்ளினீர். இன்று என்னைத் துரத்திக்கொண்டு வருகிறீர். ஆனால், உமது பிடிக்கு அகப்படமுடியாத உயரத்தில் நான் இருக்கிறேன்! எனக்கு இப்போது வாழ்க்கையைப்பற்றிக் கவலை இல்லை. வேண்டியதைப் பெறப்பணம், ஏவல்புரிய ஆட்கள், சிங்கார மாளிகை, செல்வச் சாமான்கள், நகைகள், நாசூக்குகள், எல்லாம் காத்துக்கொண்டு கிடக்கின்றன. என் முகத்தைத் தனது "மோட்சலோகம்" என்று கருதும் ஒரு சீமானின் ஆதரவில் நான் இப்போது இருக்கிறேன். நீ என்னைத்தொலைவில் நின்று, கண்டு, பெருமூச்செறியலாமேதவிர, அடையமுடியாது. நான் மாடியில் நிற்கிறேன். நீ படிக்கட்டில் நிற்கிறாய்! நான்முன்பு அபலை. அப்போது ஆதரிக்க முன்வரவில்லை நீ. இப்போது நான் உன்னை ஏற்றுக்கொள்ள முடியுமா? மேலும், மிராசுதாரர் என்னுவது..........."

"அவன் மண்டையில் இடி விழட்டும். எனக்கென்ன?"

"உமக்கு ஒன்று மில்லைதான், ஆனால் எனக்கு?"

"உனக்குப் பணத்தின்மீது அவ்வளவு பேராசையா பிடித்துவிட்டது?"

"பேராசையல்ல! அதன் அருமையைத் தெரிந்துகொண்டேன். அடைந்துமிருக்கிறேன். அதை இழக்க மனம் வருமா?"

"பணந்தானா பெரிது?"

"சந்தேகம் என்ன? வாழ்க்கையில் பணம் பிரதானமாக இருக்கும் விதமாகத்தானே உலகம் இருக்கிறது. ஏழையென்றும் பணக்காரரென்றும், இருஜாதிகள் உலகில் இல்லாமல், ஒரே ஜாதியாக இருந்தால், இந்த எண்ணம் எனக்கும் இராது, இந்தக் கேள்வியும் பிறந்திராது. பணமின்றி, எங்கள் குடும்பம் பாடுபட்டபோது, பணமா பெரிது என்று வேதாந்தம் பேசிக்கொண்டு, எங்களை யாரும் காப்பாற்ற முன்வரவில்லையே! பணம், எந்தவிதத்திலோ, என்னிடம் வந்த பிறகுதானே நான் பரிமளத்தோடு வாழ முடிந்தது" என்று கூறினேன். சோமு, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்ததைக் கண்டேன். என்னால் அதற்குமேல் பிடிவாதம் செய்ய முடியவில்லை. ஆகவே நான் "அழாதே கண்ணே, நான் உன்னை அதிகமாகத்தான் வாட்டிவிட்டேன். இதோபார்! கொஞ்சம் சிரி! இன்னமும் என் துக்கம்? இதோ போதுமா, இன்னொரு முத்தம்தரட்டுமா! ஆஹா! முகத்திலே இப்போதுதானே சந்தோஷம் தோன்றுகிறது, சோமு! இப்படி உன்னைத் தழுவிக்கொண்டு, கொஞ்சிக்குலவ நான் எவ்வளவு நாட்கள் எண்ணி எண்ணிக்கிடந்தேன் தெரியுமோ. வியர்வையைத் துடைத்துக்கொள். இதோ முந்தானையால் துடைத்துக்கொள். இனிஉனக்கு நான் விருந்தாக இருப்பேன், பயப்படாதே. மிராசுதாரர் கண்களில் படக்கூடாது. விஷயம் அவர் காதுக்கு எட்டக்கூடாது. கொஞ்சம் இரகசியமாக இருக்கட்டும். ஆனால், நீதான் என் ஆசைநாயகன், என் இன்பக் களஞ்சியம், என் உல்லாச புருஷன், என் உயிருக்குயிர், ஏன் இன்னமும் விம்முகிறாய் கண்ணே! இதோ பார், இப்படி இருந்தால், நான் மறுபடியும் கோபித்துக்கொள்வேன், பார், பார், மடியிலே படுத்துக் கொண்டாயே, என்மடிதான் உனக்கு மஞ்சமா? என்று சோமுவிடம் கொஞ்சி விளையாடினேன். என்னிடம் தஞ்சமடைந்த சோமு, என் இதழ் சுவைத்தான், முத்தமீந்தான், இன்ப ஆற்றிலே நீந்தினோம். ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அடைய முடியாமற்போன சோமு, இன்று என்னிடம் அடைக்கலம் புகுந்துவிட்டான். அடிமை நம்பர் இரண்டு, என்று என் மனதிலே பதிவு செய்துகொண்டேன். (தொடரும்)

ரோமாபுரி ராணிகள் 3-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றான், திமிர்கொண்டு ஆடினான், பின்னர் சித்திரவதைக் காளானான். அவன் அதிகார வெறியால்ஆணவத்தோடு இருந்தபோதும், மற்றைய மாதர்போல் மமதாவாதாமல், "ஏனோ இந்த அதிகாரம்? என்ன அவதிதருமோ இந்த நிலைமை" என்று அஞ்சியே வாழ்ந்துவந்தாள். அவன் மனைவி **காலேரியா** பண்டாரனு போகத்தில் புரண்டிருக்கும் புல்லனின் மனைவி, திடீலெனத் தன்கணவனுக்கு முடிகிடைத்தபோது அஞ்சினாள், மகிழ்ந்தாளில்லை.

விட்டிலியஸ் அரசனானது அதிசயமான முறையிலேதான். அவன் பயின்றது களத்திலல்ல, கட்டிலறையில். அவன் பெயரெடுத்தது அணங்குகளை அழித்ததிலேயன்றி அமளியிலல்ல. அத்தகைய விட்டிலியஸ், **கால்பா** ரோம் மன்னனானதும், ஜெர்மனியிலிருந்த ரோம்நாட்டுப் படைகளின் தலைவனாக்கப்பட்டான். பலரும் "இது என்னே! இவன் படைத்தலைவனாகிச் செய்யப்போவதென்ன!" என்று ஆச்சரியமுற்றுக் கேட்டனர். இதேசமயத்திலே கால்பா இறந்து, ஆத்தோ அரசனானான். அவன் அரியணை ஏறியதும் வீரமில்லா விட்டிலியஸ், வீரன்போல் ஏதுகூறினானெனில், "மடி ஏன் இவனுக்கு? முறியடிப்பேன் இவனை" என்றான். ஆத்தோ ஆயாசமுற்றான். "நமக்குள் சமர் ஏன்? சமரசமாவோம்! இருவரும் பங்காளிகளாகிப் பரிபாலிப்போம்" என்று. ஆத்தோ கடிதம் விட, விட்டிலியஸ், "களமே நமக்குநீதிமன்றம், அங்கு நாம் சந்திப்போம்" என்றுரைத்துவிட்டு தனது தளபதியைத் துருப்புகளுடன் அனுப்பினான். **பேட்ரிராகம்** என்ற களத்திலே, ஆத்தோவின் படைகள் புறமுதுகிட்டோடின ஆத்தோ தற்கொலை புரிந்துகொண்டான். ரோம்நகர் மக்கள் விட்டிலியஸை மன்னனென ஏற்றுக் கொண்டனர். தோரணங்கள் கட்டினர்! தோகையர் வீடுகளை அலங்கரித்தனர். விழா கொண்டாடினர். வெற்றி ஊர்வலம் நடத்தினான் விட்டிலியஸ்! அதிகாரம் சிலசமயங்களிலே, இதுபோல், யாராரிடமோ சிக்கிக் கொள்கிறது.

முடிமன்னனானதும், விட்டிலியஸ், நீரோவின் முறைகளைக் கையாளத்தொடங்கினான். நாள்தோறும் விருந்து, நடனச்சாலையிலே பொழுதுபோக்குதல், நண்பரைப் பிரதானியராக்குதல், எதிர்ப்போரை அழித்தல், ஆகிய கொடுமைகளுக்கோர் அளவில்லை. காமவெறியன் கண்மண் தெரியாது ஆடுவதுகண்ட அவன் மனைவி காலேரியா எவ்வளவோ இதமொழி புகன்றாள், பயனில்லை. மன்னனுக்கு அவளிடம் கவர்ச்சி கிடையாது. காலேரியா அழகியல்ல! திணறித் திணறிப் பேசுவாள், அவளை ஓர் பொருட்டாக அவன் மதிக்கவில்லை. அதிகாரம் பருகப்பருக இனிக்கும் ஆனால் அது ஆட்கொல்லி என்று அவள் எச்சரித்தாள். அதிகார வெறிக்குப் பலியானவர்களின் வரலாற்றைக் கூறினாள். விட்டிலியசின் வேட்கைமிகுந்த விழிகளில், தனது எதிர்காலம் இருண்டதாக இருக்குமென்பது தெரியவில்லை. சுருண்ட கூந்தலழகிகள் சுருதியுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

கூடல் கடக்கும் கண்கள். 2ம் பக்கத் தொடர்ச்சி.

சோவியத் அன்பர்கள் கூட்டத்திலே, வீர:வாலிபர்கள், கூடுகின்றனர். மகிழ்ச்சிக் குரியதே, வாழ்க்கைப் பொறுப்பு வாட்டத்தைத்தராததால், வளையாத உள்ளமும் உடலமும் பெற்று விளங்கி, எது எத்தகைய இடையூறைத் தருமோ என்றஅச்சமும் தோன்றாத பருவத்தினர், நரம்பு முறுக்கேறி, இரத்தம் கொதித்து, தோள் துடித்து, ஆவேசம் எழப்பேசும் இயல்பினர், ஆனால், அத்தகையவர், கண்முன் இருக்கும் காரியத்தைக் கவனியாது வேறு விஷயங்களிலே மனதைச் செலுத்துவதால், முரட்டுப் பேச்சும் வறட்டுச் ஜம்பமும், நெறித்த புருவமும், நீட்டிய கரங்களும், கொண்டோராய், உரத்த குரலால், உறுமல் மொழியால், உலகையே திருத்தி அமைத்துவிடக் கூடும் என்று எண்ணும், எடுப்பார் கைக்குழவிகளாகி விடுகின்றனர்! வாலிபம், வீரம், வல்லமை யாவும் விழலுக்குச் செல்லும் நீராகிறது, காலக்கழனியோ காய்ந்து கிடக்கிறது. அன்பர்களே, உமது ஆற்றலை, சமுதாயத்துச் சாக்கடையை ஒழிக்கச் செலவிட முன்வாருங்கள்! சாதிபேதக் சனியனைத் தொலைக்கச் சாதி ஆணவத்தின்இடுப்பை முறிக்க வைதீகத்தின்விலாவை நொறுக்க, மூடமதியின் முதுகை முறிக்க, வஞ்சகரின் வாழ்க்கையைக் குலைக்க, கொடுங்கோன்மை யாளரைக் குப்புறக் கவிழ்க்க முனையுங்கள். அதற்கு.உமது அறிவும் ஆற்றலும் அன்பும் வீரமும் பயன்படட்டும்! புத்துலக சிற்பிகளாவீர், என்று சோவியத் அன்பர் எனும் சுந்தரப்பெயர் தாங்கிடும் தோழர்களுக்குக் கூறுகிறோம். நாடு இன்று ரசாபாசத்தின் மடமாக, வல்லரசின் வெள்ளாட்டியாக இருப்பதற்கு; ஜார்மட்டு மல்லக்காரணம், ரஸ்புட்டீனும்தான்! தோழரே,இதை உணர்மின், உலகு குளிரும்! அவனுடைய கைகால்களிலே சேறு! உடலிலே முடை நாற்றம். தலையோ கள்ளிபூத்த காடு! முகமோ, சோகத்தின் பிம்பம். வயிறோ ஒட்டி உலர்ந்திருக்கிறது. கண்களோ மங்கிக் கிடக்கிறது, ஆடைகந்தல்! உழைத்து அலுத்து வீடு திரும்புகிறான். மாலைமணி ஆறு இருக்கும், இந்நாட்டு உழவன் என்ற உருவம் அது. அவன், மகாசன்னிதானத்தைவணங்குகிறான். மடைத்தனக்கதைகளை மதமெனக் கொண்டுழல்கிறான், ஆபாசக் கதைகளை நம்பி நலிகிறான், கொடுத்து வைத்தபடிதானே கிடைக்கும் என்று பேசுகிறான், அஞ்சி அஞ்சிச்சாகிறான். ஆமை போல் நடமாடுகிறான், ஆற்றுவார் தேற்றுவாரற்று அவதிப்படுகிறான், வேதனை எவ்வளவிருப்பினும், விடுதலை இங்கில்லை, அங்கேமேலே என்று அண்ணாந்து நோக்குகிறான் ஆகாயத்தை! அவனிடம் போயன்றோ சோவியத் சோபிதத்தைப்பற்றிப் பேசுகிறீர்! பலிக்குமா? யோசித்துப் பார்த்து ஆவன செய்யுங்கள் அன்பர்களே!

திராவிட வாலிபர் சங்கம்,

காரப்பிடாகை.

31—5—42ந்தேதி.

மாலை 6½-மணிக்கு நாகை தாலுக்கா காரப்பிடாகை மாரியம்மன் கோவிலுக்கு எதிரில் K. கோவிந்தராஜலு தலைமையில் பொதுக்கூட்டம் கூடியது. தோழர்கள் நாகை T. P. ஆறுமுகம், பாவலர் பாலசுந்தரம், ஹனிபா, கனகசுந்தரம், முதலானவர்கள் தற்காலநிலைமை என்பதுபற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். பின் நாகை தோழர் D. S. மணி அவர்கள் மறைந்ததைப்பற்றி அனுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

S. பக்கிரிசாமி,
சங்கத்தலைவர்.

நாகையில் அனுதாபம்.

1—6—42ம்தேதி மாலை 6-மணிக்கு அவுரித்திடல் மைதானத்தில் T. P. ஆறுமுகம் தலைமையில் பொதுக்கூட்டம் கூடியது. தோழர்கள் K. லக்ஷ்மண நாயுடு, S. P. கிருஷ்ணன், D. சிவஞானம், பாவலர். பாலசுந்தரம் முதலானவர்கள் காலஞ்சென்ற தோழர். மணி அவர்களின்தொண்டுகளைப் பற்றி பேசியபின். அன்னார் குடும்பத்தாருக்குஅனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

S. P. Krishnan, காரியதரிசி.
S. I. L. F. நாகை

எந்த ஜீயும் நமக்கு வேண்டாம். 8ம் பக்கத் தொடர்ச்சி.

ஆச்சாரியார், இன்னமும், காங்கிரஸ்காரராக இருந்துகொண்டு, காங்கிரஸ்வாதிகளிடையே காங்கிரஸ் இன்னவிதமாக நடந்துகொள்ள வேண்டுமென்று கூறிக்கொண்டு வருகிறாரேயன்றி, காங்கிரசை எதிர்த்தொழிக்க புதுஅமைப்பு ஏற்படுத்தும் நோக்கங்கொண்டாரில்லை. அத்தகைய புது அமைப்பு உண்டாக்கினால் அது போது நாம், ஆச்சாரியாருக்குத் தளவாடம் தருவோம், படை அளிப்போம், தோளோடு ,தோள் சேரநிற்போம். இதற்கு ஆச்சாரியார் தயாரா? என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

வடக்கே தோழர் M. N. ராய் காங்கிரசை எதிர்த்தோர் கட்சி அமைத்துள்ளனர். அதற்குப் பெரியார் உபதலைவர்! ஜனாப் ஜின்னா, காங்கிரசைத் தாக்குகிறார், அவருடன் நாம் தோழமை கொண்டுள்ளோம். டாக்டர் அம்பேத்காரிடமும் அதுபோன்றே. ஆச்சாரியாரின் நிலைமை இது போன்றதல்ல!

நட்புவேறு, கூட்டுவேறு! இருவிதமான, முரண்படும் கருத்துக்கொண்டோரும் நட்புடன் இருக்கமுடியும், ஆனால் அவர்கள் கூட்டாகவேலை செய்யமுடியாது. இரு இயல்பினர், ஒரேசமயத்தில், ஒருநோக்கங் கொண்டிருக்க வேண்டிய அவசியம்நேரிடும்போது அவர்களுக்குள் தொடர்பு உண்டாகிறது, தொடர்பு, நட்பல்ல, கூட்டுமல்ல, தனியானது. தொடர்பு நிலைத்தால் நட்பாகும். கூட்டு, என்றால், இருவரும் இன்ன காரியத்துக்காக ஒன்று சேர்ந்துழைக்கவேண்டும்என்ற ஏற்பாட்டின்மீது இருவர் ஒன்றாகி, தமதுபலத்தையும் திறனையும் கூட்டாக்கிவேலைசெய்வது. எனவே நட்பு, தொடர்பு, கூட்டு, எனும் மூன்றனுள், பெரியாருக்கும் ஆச்சாரியாருக்கும் நட்புஇருக்கக்காண்கிறோம், ஆனால், இருதலைவர்களின் கட்சிகளிடையேயும் கூட்டோ, தொடர்போ ஏற்படவேண்டுமானால், ஆச்சாரியார். அச்சத்தைவிடுத்து, காங்கிரசுக்கு எதிரிடையான முன்னணியைத் துவக்கவேண்டும், அதிலே, லீகின்திட்டம், நீதிக்கட்சித்திட்டம், அமைதல்வேண்டும். பிறகு, கூட்டாக வேலைசெய்து கோரும் இலட்சியத்தை அடைய முடியும், கிருபளானிகள் சீறி, ஜவஹர்கள் குதித்து, காந்தியார்கள் :பதைத்து எழுந்தாலும் கவலையில்லை. ஆச்சாரியார், இதனை விடுத்து, இன்றோர் "ஜீ"க்களின் போரை நடத்திவருவது, பயன் தராது! ஆசிரமங்களுக்குள் அமளி நடக்கிறதென்றால், நான்வேடிக்கை பார்க்காமல் வேறென்னசெய்வது! ஆச்சாரியார், திடீரென்று, காந்திபக்தராக இருந்தவர் மாறிவிட்டார் என்றுரைக்கும் தோழரை நான் கேட்கிறேன். மாற்றம் என்ன விதமானது, பச்சை ஓணான், கலரை மாற்றிக் காட்டுகிறதே அடிக்கடி. அது போன்றதா, அல்லது சித்தார்த்தர் புத்தரானாரே அதைப் போன்றதா! காந்திஜீ, ராஜாஜீ, எனும் இரண்டு ஜீக்களும், ஆரியத்துக்கு உழைப்பவர்களே. இருவரின்போர்த்திட்டங்களிலே மாறுபாடுகள் காணப்படலாம். நோக்கத்தில் அல்ல! ஆகவே நமக்கு இந்த இரண்டு ஜீக்களில், எந்த ஜீயும் வேண்டாம்!

எந்த ஜீயும் நமக்கு வேண்டாம்.

1ம் பக்கத் தொடர்ச்சி.

"இந்தத்தடவை அவர் பாகிஸ்தானைப் பற்றியும் திராவிடநாட்டுப் பிரிவினையைப் பற்றியும் பேசிக்கொண்டுவருவது, நமக்குச் சாதகமாக இல்லையோ" என்று கேட்டார் நண்பர்.

"சாதகந்தான், சந்தேகமில்லை, தெண்டையைவீசி விரால் இழுக்கிறார் போலிருக்கிறதே நண்பா. அவருடைய பேச்சு, வேதம், உபநிஷத்போல், விதவிதமான வியாக்யானத்துக்கு இடந்தருவதாகவன்றோ இருக்கிறது" என்று நான் கேட்டேன்.

"எது எப்படியிருந்தாலும், ஆச்சாரியாரின் மனமாற்றம் உண்மையோ, இல்லையோ, அவர் இப்போதிருப்பதைப்போல் என்றும் இருப்பாரோ அன்றி வேறுவிதமாக மாறிவிடுவாரோ, வாயாரக்கூறி மனமார எண்ணுதிருக்கிறாரோ, அன்றி உள்ளும் புறமும் ஒத்து உரைக்கிறாரோ, அவைகள் ஒருபுறம் கிடக்கட்டும். இப்போது அவர்செய்யும் பிரச்சாரம், நமக்கு ஆதரவுதானே!" என்று கேட்டார் தோழர்.

"தோழனே! எனக்கு அதிலே மனம் செல்லவில்லை. எனக்கு, இந்தச்சந்தர்ப்பத்திலே, **காங்கிரசின்** யோக்யதை வெளிவருகிறதே, அதைத் தெரிந்துகொள்வதிலேயும், தெரியாதவருக்கு எடுத்துரைப்பதிலும் மனம் செல்கிறது" என்றேன் நான்.

இரண்டு 'ஜீ''க்களுக்கும்சண்டை! ஒருவரையொருவர் "சீ" சொல்லிக்கொள்ளவில்லை, "தூ" என்று உமிழ்ந்துகொள்ள வில்லை, மற்றது நடந்துவிட்டது. இரண்டு ஆசிரமங்களிலும், ஆயாசம் மேலிட்டு விட்டது. குருவின்புத்தி கோணலாகி விட்டதென்று பிரதம சீடர் கூறுகிறார். பிரதம சீடருக்குச் சித்த சுவாதீனமில்லையென்று குரு கூறுகிறார். ஆசிரமத்திலே, இருவரையும் வாழ்த்தி வணங்கி வரங்கேட்டு நின்ற திருக்கூட்டம், திணறுகிறது. எந்த "ஜீ" சொல்வது சரி, எந்த "ஜீ"யின் பக்கம் சேருவது என்று தெரியாது திணறுகிறார்கள். தோழனே! இதைக் காணும்போதுதான் எனக்குக் கைகொட்டி நகைக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

எங்களைப் பிரிக்க முடியுமா? எமக்குள் பிளவுவருமா? நாங்கள் ஒன்றுபட்ட கருத்துடையவர்களாயிற்றே, என்று ஜம்பமாகப் பேசிக்கொண்ட கூட்டம், அன்பும், பாரதமாதாவினிடம் கொண்ட பக்தியும், வெள்ளையரை விரட்டவேண்டுமென்ற வைராக்கியமும் எங்களைப் பிணைத்து வைத்திருக்கிறது என்று பெருமை பேசிக்கொண்ட கூட்டம், காரணமின்றி, இதோ சர். சிகந்தர், ஜின்னாவைவிட்டுப் பிரிந்துவிடப் போகிறார். இன்னொரு பிரமுகர் லீகிலிருந்து பிரிந்துவிடுகிறார், என்று பேசியும் எழுதியும்பேதத்தை விதைத்து லீக்கைப் பிளந்துவிட முயற்சித்த கூட்டம், இன்று இருக்கும் நிலைமையைக் காணும்போதே எனக்குமிக மிகச்சிரிப்பாகத்தான் இருக்கிறது. அதிலும் எப்படிப்பட்ட நேரத்திலே இத்தகைய பிளவு! நாட்டுக்கும் உலகிக்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் நேரத்தில்! யாராருக்குள் பிளவு? அசல் காந்திக்கும் சோடா காந்திக்கும் பிளவு! எவ்வளவு பேதம் அவர்களுக்குள்! வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் உள்ள பேதம் என்று காந்தியார் கூறுகிறார். இத்தகைய அவலட்சணக் காட்சியைக் இன்னமும் கட்டிஅழும் இங்கிதமில்லாதவர்களே, வாருங்கள் வெளியே, என்று அழைக்கிறேன். கூரையில்லா வீட்டிலே குடிஇருக்கலாமோ, குலாமன் தூதுவனிடம் கொஞ்சுவதோ, வேண்டாமப்பா, இவர்களின் உறவையே நீக்கிவிடு, தலைமுழுகிவிட்டு, தமிழர் கட்சியிலேவந்து சேர், என்று தமிழரை நான் அழைக்கிறேன். (7ம் பக்கம் பார்க்க)

ஏஜண்டுகள் தேவை.

கீழ்க்கண்ட இடங்களில் நமது பட்டுகளுக்கு ஏஜென்ஸியை எடுத்து நடத்தத்திறமையுள்ள ஜில்லா ஏஜெண்டுகள் தேவை. ஜில்லாமுழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, சாம்பிள் காட்டி, ஆர்டர் புக் செய்யவேண்டும்.

வாக்கு சாதுர்யமாக பேசுவோரும், நல்ல உழைப்பாளியாயுள்ளோர், மாதம் ரூ. 150- முதல் ரூ. 500 வரை கண்டிப்பாக சம்பாதிக்கலாம். தகுந்த டிபாசிட் கட்டக்கூடியவர்கள் எழுதவும்.

ஜில்லாக்கள்.

1. திருநெல்வேலி	7. வடஆர்காடு
2. மதுரை	8 செங்கற்பட்டு
3 திருச்சிராப்பள்ளி	9. கோயம்புத்தூர்
4 தஞ்சாவூர்	10. நீலகிரி
5. இராமநாதபுரம்	11. சேலம்
6. தென்னாற்காடு	12. சித்தூர்.

கே. எஸ். மூத்தையா கம்பெனி
சில்க் அவுஸ் காசி, (ஸ்தாபித்தது 1900.)

தமிழர் சிற்றுண்டி விடுதி

சவுக், திருச்சி.

தமிழ்மக்களின் வசதிக்காகத் தமிழர்களால் நடத்தப்படும் தமிழர் 'சிற்றுண்டி விடுதி'யில், சிறந்தமுறையில் நிறைந்த அநுபவமுள்ளவர்களைக்கொண்டு செய்யப்படும் தித்திப்புக் காரம் முதலிய சிற்றுண்டிகளும் சாப்பாடும் தமிழ் மக்களின் ஆதரவு மென்மேலும் பெருகவேண்டுமென்பதற்காகக் குறைந்த கட்டணத்தில் மனநிறைவுதரும் எமது சிற்றுண்டிவிடுதியை எல்லாரும் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேற்படி விடுதி 16—5—42 முதல் புது மானேஜ்மெண்டில் நடைபெறுகின்றது.

M. B. S. மணி,
புரோப்ரைடர்.

Printed at the United Printing Works, Hodgsonpet Conjeeveram.
and Published by C. N. Annadurai, M. A at 51 Nimanthakara Street, L. Conjeeveram.